


நெல்லை மாவட்ட கலை பண்பாட்டுத் துறை சார்பில் பாளையங்கோட்டை மேலக்கோட்டை பூங்காவில் வைத்து குருவனம் நடத்தும் இயற்கை வண்ண ஓவியம் பயிலரங்கம் மற்றும் கண்காட்சி நிகழ்வு சட்டப்பேரவை தலைவர் மு.அப்பாவு தலைமையில் நடைபெற்றது.நிகழ்வில் கழக துணை பொது செயலாளர் கனிமொழி கருணாநிதி எம்.பி.அவர்கள் பங்கேற்று பயிலரங்க கண்காட்சியை ஓவியம் வரைந்து துவக்கி வைத்தார். உடன் நெல்லை கிழக்கு மாவட்ட செயலாளர் இரா.ஆவுடையப்பன், நெல்லை மத்திய மாவட்ட பொறுப்பாளர் மைதீன்கான், மு.அப்துல்வகாப் எம்.எல்.ஏ, மேயர் சரவணன்,மாநகராட்சி ஆணையர் சிவ கிருஷ்ணமூர்த்தி,மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன்,துணை மேயர் ராஜ், ஓவியர் சந்துரு உள்பட பலர் உள்ளனர்.



இராமநாதபுரம் முத்தமிழ் அறிஞரின் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு தமிழ்நாடு அரசு மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை நடத்தும் பன்னோக்கு சிறப்பு மருத்துவ முகாம் மற்றும் காப்பீடு திட்ட பயனாளிகள் பதிவு செய்யும் முகாம் இராமநாதபுரம் மாவட்டம் டி. மாரியூர் கிராமத்தில் அரசுப்பள்ளியில் நடைபெற்றது. பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை மற்றும் கதர் கிராம தொழில்கள் வாரியத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் கலந்து கொண்டு மருத்துவ சிறப்பு முகாமை தொடங்கி வைத்தார்.இந்த முகாமில் பொது மருத்துவம், ஈ.சி.ஜி, இரத்த அழுத்தம் பரிசோதனை, தோல் நோய், காது, மூக்கு தொண்டை சிகிச்சை, எலும்பு சிகிச்சை, குழந்தைகள் நல மருத்துவம், மன நல மருத்துவம், இருதய சிகிச்சை போன்ற சிகிச்சைகள் பரிசோதனை அளிக்கப்பட்டது. இந்த முகாமில் மாவட்ட ஆட்சியர் விஷ்ணு சந்திரன் சுகாதாரத்துறை இணை இயக்குநர் மற்றும முன்னாள் மாவட்ட கழக செயலாளர் சுப.த. திவாகரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் முருகவேல், ஒன்றிய செயலாளர்கள் சாயல்குடி குலாம், ஆப்பனூர் ஆறுமுகவேல், முதுகுளத்தூர் பூபதி மணி, கோவிந்தராஜ், சாயல்குடி ஜெயபால், மற்றும் 32 சிறப்பு மருத்துவர்கள். 162 செவிலியர்கள் பணியாளர்கள் மற்றும் அரசு அதிகாரிகள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

## முத்தமிழறிஞர் நூற்றாண்டு விழா - முதல்வர் பிறந்தநாள் விழா!

# சிங்கம் புணரி ஒன்றிய, நகரம் சார்பில் மாபெரும் ரத்ததான முகாம்!

## பூமிநாதன் - அம்பலமுத்து - கதிர்வேல் - சிவக்குமார் - செந்தில் பங்கேற்பு!

சிங்கம்புணரி, ஜூன் 28-

சிங்கம்புணரியில் முத்தமிழ் அறிஞர் கலைஞரின் நூற்றாண்டு விழா தமிழக முதல்வர் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் மு.க. ஸ்டாலின் அவர்கள் பிறந்த நாளை முன்னிட்டும் மாபெரும் ரத்ததான முகாம் நடைபெற்றது.

சிவகங்கை மாவட்டம் சிங்கம்புணரி ஒன்றிய நகர திமுக சார்பில் கூட்டுறவுத்துறை அமைச்சரும் சிவகங்கை மாவட்ட கழகச் செயலாளருமான பெரிய கருப்பன் உத்தரவுக்கு இணங்க முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் நூற்றாண்டு விழா மற்றும் திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைவர் -தமிழ்நாட்டின் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் பிறந்த நாளை முன்னிட்டு மாபெரும் ரத்த தான முகாம் சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் நடைபெற்றது.

சிங்கம்புணரி ஒன்றிய நகர திமுக சார்பில் நடைபெற்ற ரத்த தான முகாமிற்கு ஒன்றிய செயலாளர் பூமிநாதன், பேரூராட்சி மன்ற தலைவர் அம்பலமுத்து, நகரச் செயலாளர் கதிர்வேல், நகர அவைத் தலைவர் சிவக்குமார், பேரூராட்சி மன்ற துணைத் தலைவர் இந்தியன் செந்தில் ஆகியோர் தலைமையில் பிரான்மலை அரசு ஆரம்ப சுகாதார நிலையம் மருத்துவ அலுவலர் நபீஷாபானு மற்றும் சிவகங்கை ரத்த வங்கி மருத்துவ அலுவலர்கள் குழு முன்னிலையில் ரத்த தான முகாம் நடைபெற்றது.

சிங்கம்புணரி அண்ணா மன்றத்தில் நடைபெற்ற முகாமில் பல வகை குரூப்புகள் உள்ளடக்கிய ரத்தங்கள் இளைஞர்கள் முன் வந்து வழங்கினார்கள் பிரான்மலை அரசு வட்டார மருத்துவ குழு மருத்துவர் வசந்த், சரவணன், வீர தங்க குமார் ஆகியோருடன் மருத்துவக் குழுவினர் ரத்த தானம் வழங்கும் இளைஞர்களுக்கு முறையாக மருத்துவ பரிசோதனைகளை மேற்கொண்டு அவர்கள் ரத்த தான வழங்கலாமா என்பது குறித்து அவர்கள் அறிக்கை வழங்கினார்கள்.

அதன் அடிப்படையில் இளைஞர்கள் 51 பேர் ரத்த தானம் வழங்கினார்கள் சுகாதார ஆய்வாளர்கள் எழில் மாறன், ருத்ர சேனா, பிருத்திவிராஜ் உள்ளிட்ட மருத்துவக் குழுவினர் உடன் இருந்தனர்.

ரத்ததானம் வழங்கிய நபர்களுக்கு உடனடியாக ஊட்டச்சத்து மிகுந்த குளிர் பானங்கள், இளநீர், பழ வகைகள் பழச்சாறுகள் உள்ளிட்டவைகள் நகர அவைத் தலைவர் சிவக்குமார் சார்பில் வழங்கப்பட்டது. சித்த மருத்துவ குழு மருத்துவர் சரவணன் தலைமையில் சத்து மிகுந்த சித்த மருத்துவ பொருட்கள் ரத்தம் கொடுத்தவர்களுக்கு வழங்கப்பட்டன. மேலும் ரத்த வழங்கி அனைவருக்கும் உடனடியாக பாராட்டு சான்றிதழ்கள் வழங்கப்பட்டன .ரத்த தானத்தில் 23வது முறையாக ரத்தம் வழங்கிய சிங்கம்புணரி சமூக சேவகர் தி.மு.க. இளைஞரணியைச் சேர்ந்த ஜெய்ஹிந்த் பாலாவுக்கு நகர அவை தலைவர் சிவக்குமார், மற்றும் பேரூராட்சி மன்ற தலைவர் அம்பல முத்து, துணைத் தலைவர் இந்தியன் செந்தில் குழுவினர் வாழ்த்து தெரிவித்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணைச் செயலாளர் சிவ புரிசேகர், நகர துணைச் செயலாளர் அலாவுதீன், மாவட்ட பிரதிநிதிகள் செல்வகுமார், தனுஷ்கோடி, பூமிநாதன் பிரதிநிதி குடோன் மணி, புகழேந்தி, நகர இளைஞரணி அருண் பிரசாத் ஒன்றிய இளைஞர் அணி மனோகரன், மருத்துவர் அருள்மணி நாகராஜன், முன்னாள் மாவட்ட கவுன்சிலர் கதிர்காமம், தொழில் நுட்ப பிரிவு சையது, அழகு ராஜு, பொன் சரவணன், பரிச்சி சரவணன், அமுதன், மதன் குமார், சேவுகமூர்த்தி, சுதாகர், சஞ்சய்போஸ், கிருங்கை பிரதாப், தொண்டரணி துரைசாமி மற்றும் நிர்வாகிகள் தொண்டர்கள் பொது மக்கள் கலந்துகொண்டனர்.




தூத்துக்குடி தருவை மைதானத்தில் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் சார்பில் நடைபெற்ற "முதலமைச்சர் கோப்பை விளையாட்டு போட்டிகளில் வெற்றிபெற்ற பள்ளி, கல்லூரி மாணவர் – மாணவிகள் மற்றும் அரசு அதிகாரிகளுக்கு விருதுகள் மற்றும் சான்றிதழ்களை தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினரும், தி.மு.க. துணைப் பொதுச்செயலாளரும் கனிமொழி கருணாநிதி எம்.பி. வழங்கினார். உடன் மீன்வளம், மீனவர் நலன் மற்றும் கால்நடை பராமரிப்புத்துறை அமைச்சரும், தூத்துக்குடி தெற்கு மாவட்ட செயலாளருமான அனிதா ஆர்.ராதாகிருஷ்ணன், சட்டமன்ற உறுப்பினர்கள் ஜி.வி.மார்கண்டேயன், எம்.சி.சண்முகையா, மாநகராட்சி மேயர் ஜெகன் பெரியசாமி, மாவட்ட பஞ்சாயத்து தலைவர் அ.பிரம்மசக்தி, மாநில வர்த்தகர் அணி துணைச் செயலாளர் எஸ்.ஆர்.எஸ். உமரிசங்கர், மாநகரச் செயலாளர் ஆனந்த சேகரன், திரேஸ்புரம் பகுதிச் செயலாளர் நிர்மல்ராஜ் மற்றும் தி.மு.க. கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

# விருதுநகர் முரசொலி நிருபர் மு.கந்தசாமி இல்லத் திருமண விழா!

## அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன் - தங்கம் தென்னரசு வாழ்த்து!

விருதுநகர், ஜூன் 28 -

விருதுநகர் முரசொலி நிருபர் மு.கந்தசாமி க.கஸ்தூரி இவர்களின் மகள் வழிப் பேத்தி எஸ்.கீர்த்தி என்பவருக்கும், எம்.முனியாண்டி எம்.அய்யம்மாள் இவர்களின் மகன் எம்.அழகு முனியசாமி இவர்களின் திருமணம் ஜூன் 29, வியாழக் கிழமை அன்று வி.வி.எஸ். திருமண மண்டபத்தில் 10.30 மணிக்கு மேல் 12.00 மணிக்குள் நடைபெற உள்ளது. இவர்களின்



திருமணத்தை அமைச்சர்கள் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு ஆகியோர்கள் நடத்தி வைக்கின்றனர். விருதுநகர் சட்டமன்ற உறுப்பினர் ஏ.ஆர்.ஆர்.சீனிவாசன் தலைமையில் நடைபெற இருக்கின்றது. அகில இந்திய காங்கிரஸ் கமிட்டி செயலாளர் மாணிக்கம்தாகூர், எம்.பி., கழக துணைப் பொதுச் செயலாளர் கனிமொழி கருணாநிதி,எம்.பி., தமிழச்சி தங்கப்பாண்டியன், எம்.பி., எ ஸ் . த ங் க ப் பா ண் டி யன்,எம்.எல்.ஏ., தனுஷ்குமார், எம்.பி., தனுஷ் கொடி, எஸ்.ஆர்.எஸ்.ஆர். மாதவன், சங்கீதா இன்பம், ஜி.கரிக்கோல்ராஜ், டி.எஸ். ஆர்.சுபாஷ், எம்.ரத்னகுமார், ராஜாசொக்கர், பாலகிருஷ்ணன், ரவி, குருநாதன் ஆகியோர்கள் முன்னிலை வகிக்கின்றனர்.

இந்த திருமணத்திற்கு தி.மு.க. நகர செயலாளர் எஸ்.ஆர்.எஸ். தனபாலன் வரவேற்புரை ஆற்றுகின்றார். இந்நிகழ்ச்சியில் லிங்கம், ராமசாமி கே.கே.எஸ். எஸ்.ஆர்.ஆர். நாராயணன், உரிமையாளர், இராஜலட்சுமி ஸ்பின்னர்ஸ், தலைமை செயற்குழு உறுப்பினர்கள் கே.கே.எஸ்.எஸ்.வி.டி. சுப்பாராஜ் மற்றும் குன்னூர் சீனிவாசன், அறங்காவல் குழுத் தலைவர் கே.எம்.விஜயக்குமார், இளைஞர் அணி செயலாளர்கள் கே.கே.எஸ். எஸ்.ஆர். ரமேஷ், கே.ஜி. இராஜகுரு, வர்த்தக அணி த.வனராஜா, வி.கே.துரை, ஆர்.வி.எம். மகேந்திரன், தமிழக நியூஸ் ஆசிரியர் சி.செல்லபாண்டியன், இராவணன், வெற்றி, சேர்மன் சுமதிராஜசேகர், மாநகர செயலாளர் எஸ்.ஏ.உதய சூரியன், நகர செயலாளர் காளிராஜன், ஏ.ஆர்.ஆர். கோவிந்தராஜ், கிருஷ்ணமூர்த்தி, தேனிவசந்தன், சி.பி.எம். முருகன், புகழேந்தி, ஆசிரியர் நல்லதம்பி, கூடலரசன், பாண்டியன் சிவா, கிட்டு, சிவப்பிரகாசம் சுந்தரலட்சுமி, ரவிக்கண்ணன், சாகுல்ஹமீது, கருணாநிதி, பித்ரு நாகேந்திரன், அண்ணாதுரை, அசோகன், ஆகியோர்கள் வாழ்த்துரை வழங்க உள்ளனர்.

ஆர்.பி.மதியழகன், ஆர். சுதாகர், எஸ்.கோதண்டராமன், அக்ரி கணேசன், ஆர். கிருஷ்ணகுமார், ஏ.ஆர். சுபேதா, போஸ் (எ) ஜெயசந்திரன், நேஷனல் கணேசன், நேஷனல் ராமர், நகர தி.மு.க. துணை செயலாளர்கள் ஏ.எஸ்.கே.ரமேஷ்குமார், மரியராஜ், வர்த்தக அணி எல்.திருமாறன், தி.மு.க. அவைத் தலைவர் காசிராஜன் மற்றும் ஒன்றிய செயலாளர்கள், விருதுநகர் நகர் மன்ற உறுப்பினர்கள் ஆகியோர்கள் கலந்து கொள்கின்றனர்.



மதுரை மாநகர் மாவட்டம் முன்னாள் பகுதி கழக செயலாளர் எல்லிஸ் இரா. முருகன் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவு நாளான (25.06.2023) அன்று மதுரை மாநகர் மாவட்ட செயலாளர் கோ.தளபதி எம்.எல்.ஏ. நினைவு பாசறை கல்வெட்டை திறந்து வைத்தார். மாநில தணிக்கை குழு உறுப்பினர் வேலுச்சாமி திராவிட முன்னேற்ற கழகத்தின் கொடியை ஏற்றி வைத்தார். இத்துடன் மாவட்ட செயலாளர் அவர்கள் பொதுமக்களுக்கான அன்னதான நிகழ்வை தொடங்கி வைத்தார். இந்த நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் .ஜெயராமன், மாவட்ட அவைத் தலைவர் ஒச்சுபாலு, பொதுக்குழு உறுப்பினர் வைகை பரமன், பகுதி கழக செயலாளர்கள் பி.கே.செந்தில், சு.பா. கண்ணன், ஜீவன்.பா. ரமேஷ் குமார் மற்றும் மாநகராடசி கவுன்சிலர்கள் மகாலட்சுமி நவகோடி, நூர்ஜகான், மகாலட்சுமி அழகுசுந்தரம், மாரநாடு, ஜானகி சுரேஷ், ஜெயச்சந்திரன், சென்னியம்மாள், கார்த்திக் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் பூங்கா மணிகண்டன், அழகு சுந்தரம், மாணிக்கம், திருமுருகன், வி.எஸ். ராஜேஷ் கலந்துகொண்டனர். உடன் மாவட்டம், பகுதி மற்றும் வட்ட கழக நிர்வாகிகள் இருந்தனர்.



முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழா – முதல்வர் அவர்களின் பிறந்தநாள் விழாவையொட்டி சிங்கம்புணரியில் மாபெரும் ரத்ததான முகாம் அமைச்சர் கே.ஆர். பெரியகருப்பன் உத்தரவின்படி, நடைபெற்றது. இதில் பூமிநாதன், அம்பலமுத்து, கதிர்வேல், இந்தியன் செந்தில் உள்ளிட்ட கழகத்தினர் பங்கேற்றனர்.

## முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டையொட்டி

# உழவர்கரை தொகுதி தி.மு.க. சார்பில் பொதுக்கூட்டம் - நல உதவிகள்!

## தமிழன் பிரசன்னா - இரா.சிவா எம்.எல்.ஏ. சிறப்புரை!

புதுச்சேரி, ஜூன் 28-

முத்தமிழறிஞர் கலைஞர் நூற்றாண்டு விழாவை முன்னிட்டு, உழவர்கரை தொகுதி தி.மு.க. சார்பில், நலத்திட்டம் வழங்கி, மாபெரும் பொதுக்கூட்டம் நேற்று முன்தினம் மாலை 6 மணிக்கு உழவர்கரை குண்டு சாலையில் (மூலகுளத்திலிருந்து மேட்டுப்பாளையம் செல்லும் சாலை) நடைபெற்றது.

உழவர்கரை தொகுதி செயலாளர் கலிய. கார்த்திகேயன் தலைமை தாங்கினார். தொகுதி அவைத் தலைவர் ஜெ. விஜயரங்கம் வரவேற்புரை ஆற்றினார்.

தலைமைச் செயற்குழு உறுப்பினர் டி.அருட்செல்வி, வழக்கறிஞர் அணி எஸ்.லோககணேசன், மாநில விவசாய அணி துணை அமைப்பாளர் து.அரிதேவன், மாநில இளைஞர் அணி துணை அமைப்பாளர் ப. வெங்கடாசலம், விவசாய தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஆர்.சேகர், மாணவரணி துணை அமைப்பாளர்கள் இரா. மதியழகன், சே. சிவராமன், ஐ. அமுதன், பொறியாளர் அணி துணை அமைப்பாளர் சே. சொர்ணராஜ், நெசவாளர் அணி துணை அ மை ப் பா ள ர் க ள் மு. விவேகானந்தன், சுகன் ராஜ், மகளிர் தொண்டர் அணி துணை அமைப்பாளர் ஜான்சி ராணி, மகளிர் அணி துணை அமைப்பாளர் ஆர். புஷ்பலதா, தொகுதி துணைச் செய லாளர்கள் பி.சரவணன், அ. பானுப்பிரியா, தொகுதி பொரு ளாளர் பா . செ ந் த மி ழ் ச் செ ல் வன், மாநில பிரதிநிதிகள் எ.அகிலன், எஸ். ஐய்யப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

தலைமைக் கழக செய்தி தொடர்பு இணைச் செயலாளர் வழக்கறிஞர் தமிழன் பிரசன்னா, புதுச்சேரி மாநில கழக அமைப்பாளர், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் இரா.சிவா, மாநில கழக அவைத்தலைவர் எஸ்.பி. சிவக்குமார், முன்னாள் எம்.பி., சி.பி. திருநாவுக்கரசு, மாநில துணை அமைப்பாளர் வி.அனிபால் கென்னடி, எம்.எல்.ஏ., மாநில பொருளாளர் இரா.செந்தில்குமார் எம்.எல்.ஏ., எல். சம்பத் எம்.எல்.ஏ. ஆகியோர் சிறப்புரை ஆற்றினார்கள்.

தொடர்ந்து ஏழை, எளிய மக்களுக்கு பல்வேறு நலத் திட்ட உதவிகள், மாணவர்களுக்கு ஊக்கத் தொகை மற்றும் கழக மூத்த முன்னோடிகளுக்கு பொற்கிழி வழங்கப்பட்டன.

இந்த பொதுக்கூட்டத்தில், மாநில துணை அமைப்பாளர்கள் ஏ.கே. கல்யாணி குமார், தைரியநாதன், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் சண். குமரவேல், கே.எம்.பி. லோகையன், ஜே.வி.எஸ். ஆறுமுகம், ப.காந்தி, பொதுக்குழு உறுப்பினர்கள் பொதுக்குழு உறுப்பினர்கள் வெ. ராமசாமி, பா.செ.சக்திவேல், அ.சோமசுந்தரம், ந.தங்கவேலு, ப.செல்வ நாதன், சி.கோபால், வே. கார்த்திகேயன், பெ.வேலவன், வீ. சண்முகம், ஆர். கோகுல், எஸ். தர்மராஜன், ஆர். ரவீந்திரன் (எ) ரவி, வி.செந்தில் வேலன், டாக்டர் மாயக் கிருஷ்ணன், ப. இளம்பரிதி, பெ. பழனி, மு.பிரபாகரன், எஸ்.எஸ். செந்தில்குமார், வே.மாறன் (எ) கனகராஜ், நா.கோபாலகிருஷ்ணன், எஸ். அமுதாகுமார், எஸ். நர்கீஸ், சிறப்பு அழைப்பாளர்கள் முகிலன், டாக்டர் நித்திஷ், தொகுதி கழகச் செயலாளர்கள் எம்.ஆர். திராவிடமணி, இரா. சக்திவேல், வ.சீத்தாராமன், பாண்டு அரிகிருஷ்ணன், செ.நடராஜன், ஜி.பி.சௌரிராஜன், து. சக்திவேல், கோ. தியாகராஜன்,ர.சிவக்குமார், ரா.ஆறுமுகம், ப. வடிவேல், ஜெ. மோகன், ர.ரவிச்சந்திரன், வெ.சக்திவேல், க.இராஜாராமன், செல்வ. பார்த்திபன், பி.சா.இளஞ்செழியப் பாண்டியன்,ல.மணிகண்டன், செ. இ ரா தா கி ரு ஷ் ண ன், ம.கலைவாணன், ச.அசோக் (எ) மோதிலால், கழக முன்னோடிகள் பூ.சு. இளங்கோவன், ஆர்.பலராமன், வேலன், அப்சரா தங்கவேலு, நாராயணன் மற்றும் அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள், கழக முன்னோடிகள் பங்கேற்றனர்.

கூட்டத்தின் முடிவில், தொகுதி இளைஞர் அணி அமைப்பாளர் இரா.சந்தோஷ் நன்றி கூறினார்.



சிவகங்கை மாவட்டம் மானாமதுரையில் ரூபாய் 10,கோடியில் அமைக்கப்பட உள்ள நகராட்சி சுத்திகரிப்பு நிலைய பணியினை கூட்டுறவுத்துறை அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் துவக்கிவைத்தார். உடன் திருமதி தமிழரசி ரவிக்குமார் எம்.எல்.ஏ. மாவட்ட வருவாய் அலுவலர் மணிவண்ணன் நகராட்சி தலைவர் மாரியப்பன் கென்னடி பேரூராட்சித் தலைவர் த.சேங்கைமாறன் நகராட்சி துணைத்தலைவர் பாலாசுந்தர்.க.பொன்னுச்சாமி உட்பட அதிகாரிகள் கலந்து கொண்டார்கள்.



தேனி வடக்கு–தெற்கு மாவட்டத்தைச் சேர்ந்த புதிதாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள திட்டமிடுதல் குழு உறுப்பினர்கள் தேனி நகர செயலாளர் நாராயண பாண்டியன் கோம்பை தங்கம் பிசி பட்டி பவானி, நைனா முகமது ஜெயந்தி ஆகியோர் வடக்கு மாவட்ட செயலாளர் தங்க தமிழ்ச்செல்வனை சந்தித்து வாழ்த்து பெற்றனர். உடன் போடி நகர செயலாளர் புருஷோத்தமன் பிசி பட்டி பேரூர் செயலாளர் செல்வராஜ் மற்றும் கழக முன்னோடிகள் உடன் இருந்தனர்.